**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 25 / 2021**

**பி.வா.சா.1 – முருகன்** **02.09.2025**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்துக்கள் அழகு கோனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா 1வது லக்க சொத்து இருளாயிக்கு பாத்தியப்பட்டது. இருளாயி இறந்த பின்பு 1வது லக்க சொத்து அழகு கோனாருக்கு பாத்தியப்பட்டது. தாவா 2 மற்றும் 3 லக்கசொத்துக்கள் அழகு கோனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அழகு கோனார் எனது உறவினர். எனது தகப்பனார் பெயர் முத்துராக்கு சேர்வை என்றால் சரிதான். அழகு கோனாரும் எனது தந்தையும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அழகு கோனார் எந்த விதத்திலும் எனக்கு உறவினர் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அழகு கோனாருக்கு பூர்வீக பாத்தியமா, கிரைய பாத்தியமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அழகு கோனாரின் உடன்பிறந்தவர்கள் வீரணக்கோனார், கிருஷ்ணன் ஆவார்கள். அழகு கோனாருக்கு மூத்த மனைவி இருளாயி அம்மாள் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். இருளாயி அம்மாள் இறந்த பிறகு அழகு கோனார் அளவடையாள் என்பவரை திருமணம் செய்து விவாகரத்து ஆன பின்பு பேச்சியம்மாள் என்பவரை மூன்றாவதாக திருமணம் செய்தார். 31.01.1990 ல் அழகு கோனார் பேச்சியம்மாளுக்கு தாவா 2 மற்றும் 3 லக்க சொத்துக்களை தானமாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பிறகு பேச்சியம்மாள் அந்த சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அழகு கோனாருக்கும்

எனக்கும் எந்த உறவும் இல்லாத நிலையில் அழகு கோனாரின் சொத்து சம்மந்தமான ஆவணங்கள் எவ்வாறு என்னிடம் வந்தது என்றால் அழகு கோனார் மூன்றாவது மனைவி பேச்சியம்மாளை விவாகரத்து செய்த பின்பு கோவிலில் சென்று வசித்து வந்தார் அதன்பிறகு எனது வீட்டிற்கு வந்து என்னுடன் வசித்து வந்தார். நான் தான் அவரை பராமரித்து வந்தேன் அதனால் அவர் எனக்கு 2001ல் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்தார். அழகு கோனார் பேச்சியம்மாளை விவாகரத்து செய்த பின்பு கோவிலில் வசித்து வந்து அதன்பின்பு என்னுடன் வசித்து வந்தார் என்ற விபரத்தை எனது எதிர்வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பேச்சியம்மாளை அழகு கோனார் விவாகரத்து செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அழகு கோனாரும் பேச்சியம்மாளும் விவாகரத்து செய்ததற்கு எந்தவிதமான ஆவணங்களும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பேச்சியம்மாளும் அழகுகோனாரும் ஒன்றாக வசித்த போது அழகு கோனார் தான் பேச்சியம்மாளை விட்டு தன்னிச்சையாக பிரிந்து சென்றார் என்றால் சரியல்ல. 31.01.1990 ல் பேச்சியம்மாளுக்கு அழகு கோனார் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலை அழகு கோனார் என்னிடம் கொடுத்துள்ளார் எந்த தேதியில் என்னிடம் கொடுத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அழகு கோனார் 2020ல் இறந்துபோனார். அழகு கோனார் பேச்சியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட்டை ரத்து செய்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அழகு கோனார் பேச்சியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட்டை ரத்து செய்ததாக என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை. 10.09.2001 ல்

எனக்கு உயில் எழுதி வைத்த பின்பு தான் பேச்சியம்மாள் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தை அழகு கோனார் என்னிடம் கொடுத்தார். எனக்கு உயில் எழுதி வைத்த பின்பும் பேச்சியம்மாளுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட்டை ரத்து செய்து கொடுக்க நான் அழகு கோனாரிடம் கேட்கவில்லை. எனக்கு உயில் எழுதி வைத்த பின்பு தான செட்டில்மெண்ட்டை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் அழகு கோனார் பெயரில் சொத்து இருந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. அழகு கோனாருக்கு முதல் இரண்டு மனைவிகள் மூலம் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். மூன்றாவது மனைவி பேச்சியம்மாள் மூலமும் அழகு கோனாருக்கு குழந்தைகள் இல்லை. ஒரு சொத்தை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்ட பின்பு அதை ரத்து செய்யாமல் அந்த சொத்தை வேறு நபருக்கு எழுதி வைக்கமுடியாது என்றால் அழகு கோனார் பெயரில் சொத்து இருந்ததால் உயிலை பதிவு செய்தார்கள். 2001ல் அழகு கோனார் எனக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தில் சாட்சியாக அயோத்தி என்பவர் கையொப்பம் செய்தார் இன்னொரு சாட்சி யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி உயில் ஆவணம் திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அந்த உயில் ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டது. அந்த உயில் ஆவணத்தை கண்ணன் என்பவர் தட்டச்சு செய்தார் அவர் தற்போது உயிருடன் இல்லை. அழகுகோனார் தான் உயில் ஆவணத்தை எழுதிக் கொடுத்தார் என்பதற்கு சாட்சிகள் உள்ளதா என்றால் உள்ளது. அழகு கோனார் எனக்கு உயில் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் வகையறாவுக்கு சொத்துக்கள் கிடைக்கக்கூடாது என்பதற்காக உயில் எழுதி

வைக்கப்பட்டதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் அழகு கோன் மற்றும் பேச்சியம்மாள் பெயரில் கூட்டாக பட்டா உள்ளது என்றால் சரியல்ல. அழகு கோனார் எனக்கு எழுதிக் கொடுத்த உயிலின் அடிப்படையில் நான் எனது மனைவி ராஜாத்திக்கு 01.06.2020ல் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அது தாவா சொத்து அல்ல. தாவா 2வது லக்க சொத்தை மேற்படி 01.06.2020 தான செட்டில்மெண்ட்டை 4வது லக்கமாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க எனக்கு உரிமையில்லை அந்த தான செட்டில்மெண்ட் செல்லாது என்றால் சரியல்ல. 2001 ல் அழகு கோனார் எழுதிக்கொடுத்த உயிலின் அடிப்படையில் என் பெயரில் மோசடியாக பட்டா மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 2வது லக்க சொத்தை பேச்சியம்மாளிடமிருந்து இந்த வாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது மோசடியான கிரையம் ஆகும் அசல் ஆவணம் இல்லாமல் கிரையம் செய்துள்ளார்கள். வாதி கிரையம் வாங்கிய பின்பு அவர் அனுபவத்தை நான் இடையூறு செய்ததாக என் மீது பழையனூர் காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்து வாதி கிரையம் வாங்கியுள்ளதால் நான் இடையூறு செய்யக்கூடாது என்று போலீசார் என்னை கண்டித்தார்கள் என்றால் இல்லை. தாவா 1வது லக்க சொத்திற்கு பேச்சியம்மாள் பெயரிலிருந்து வாதி பெயருக்கு 07.01.2021 அன்று பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பட்டா மாறுதலுக்கு பின்பும் பட்டா எண் 2232 என்ற எண்ணில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பெயரில்

ஏற்பட்ட பட்டா மாற்றத்திற்கு நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் அழகு கோனார் பெயரில் தான் பட்டா இருந்தது. நான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை, அழகு கோனார் பெயரில் அந்த நேரத்தில் பட்டா இல்லை என்றால் சரியல்ல. 31.01.1990 ல் அழகு கோனார் பேச்சியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 31.01.1990 தான செட்டில்மெண்ட் பத்திரம் எனது கைக்கு எப்போது வந்தது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை என்னிடம் ஒப்படைத்ததாக உயில் ஆவணத்தில் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணம் அழகு கோனார் மூலம் எனக்கு கிடைத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 31.01.1990 தான செட்டில்மெண்ட் ஆவணம் அழகு கோனார் என்னிடம் ஒப்படைத்தார் என்பதற்கு சாட்சியம் உள்ளதா என்றால் நான் தான் சாட்சி. அழகு கோனாரின் அசல் பத்திரங்களை நான் மோசடியாக எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. அழகு கோனார் உயிருடன் இருந்த போது பேச்சியம்மாள் அழகு கோனாரிடம் அசல் பத்திரத்தை கேட்டு அது தொலைந்துவிட்டது என்று அழகு கோனார் கூறியதால் அசல் ஆவணம் தொலைந்து போனதாக சான்றிதழ் பெற்று பேச்சியம்மாள் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல வாதி தான் சான்றிதழ் பெற்றார். அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது வாதி மோசடியாக சான்றிதழ் பெற்றதாக நான் காவல் துறையில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் பதிவு துறையில் புகார் கொடுத்தேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆள்மாறாட்டம் செய்து

பத்திரம் பதிவு செய்ததாக தான் புகார் கொடுத்துள்ளேன் என்றும் பத்திரம் காணவில்லை என்று மோசடியாக சான்றிதழ் பெற்றதாக புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாதி கிரையம் வாங்கியது முதல் இன்றுவரை வாதியின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எந்தவிதமான எழுத்து பூர்வமான உரிமை ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உரிமை ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லாது மோசடியானது என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு தாவா சொத்தை பொறுத்து ஆவணம் எழுதிக்கொடுக்க எந்த வித உரிமையும் இல்லை என்றால் அது தாவா சொத்து அல்ல. தாவா 3வது லக்க சொத்து வீடு வாதியின் கைவசம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல 2வது பிரதிவாதி சுப்பையாவின் கைவசம் உள்ளது. 2ம் பிரதிவாதி சுப்பையா தற்போது நீதிமன்றத்தில் உள்ளார். 2ம் பிரதிவாதிக்கு அழகு கோனார் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. அழகு கோனாருக்குவாரிசுகள் இல்லை என்பதால் அவரை நாங்கள் கைவசப்படுத்தி அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் உரிமை கொண்டாட எங்களுக்கு சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நானும் 2ம் பிரதிவாதியும் சொத்தை அபகரிப்பதற்காக பொய்யாக வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. அழகு கோனார் எழுதி வைத்த உயில் சட்டப்படிநிரூபிக்கப்படாத

வகையில் தாவா சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அழகு கோனார் எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் சட்டப்படியான உரிமை உள்ளது வாதி சட்டப்படி கிரையம் வாங்கியுள்ளதால் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை